என் ஆவி என்னில் பயப்படும் போது
When My Spirit Grows Faint
Album 35 Song 6

Song 6 என் ஆவி என்னில் பயப்படும் போது 142 சங்கீதம்

Psalm 142 is a prayer of David when he was in a cave, feeling abandoned and persecuted. He pours out his complaint to the Lord and declares that God is his refuge and portion.

என் ஆவி என்னில் பயப்படும் போது
கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன்
என் ஆத்துமாவை விசாரிப்பவர் இல்லாதபோது
கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கெஞ்சுகிறேன்

கர்த்தருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுவேன்
கர்த்தருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கை செய்வேன்
எனக்கு யாரிடத்திலும் அடைக்கலமில்லாமல் போனது
வலதுபுறமாய்க் கண்ணோக்கிப் பாரும் கர்த்ததாவே

கர்த்தர் என் பாதையை அறிந்திருக்கிறார்
கர்த்தர் நான் நடக்கும் வழியையும் அறிந்துள்ளார்
என்னை அறிவார் ஒருவரும் இங்கில்லை
என்னைப் பிடிக்க வருவோர்க்கு என்னைத் தப்புவியும் கர்த்தாவே

கர்த்தர் என் கூக்குரலுக்கு செவிக் கொடுப்பார்
கர்த்தர் நான் தாழ்த்தப்பட்டேன் என்று அறிவார்
என்னிலும் பலவான்களாய் இருக்கும் பகைஞனின்
காவலுக்கு என் ஆத்துமாவைத் தப்புவியும் கர்த்தாவே

உமது நாமத்தை நான் துதிக்க வழி திறந்திடும்
எனக்கு நீர் தயவுசெய்து இரட்சிப்பைத் தந்தருளும்

நீதிமான்கள் என்னைச் சூழ்ந்துக் கொள்ளட்டும்
அல்லேலூயா அல்லேலுயா என்று என் நாவு முழங்கட்டும்

அல்லேலூயா அல்லேலுயா
அல்லேலூயா அல்லேலுயா



The Lord said to my Lord,
"Sit at my right hand until
I make your enemies
a footstool for your feet."
Rule in the midst
of your foes
Your people will be willing
on your day of power.
HALLELUJAH